உ

சிவமயம்

அருள்மிகு அண்ணாமலையார் துணை



# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

## திருவண்ணாமலை

# ஆடிப்பூரம் பிரம்மோற்சவம்

## அழைப்பிதழ்

tnhrce.org

பசலி 1427

**திருக்காளத்தி - ஞானப்பூங்கோதை**

அளவிலாத் தோற்றம் றாயவற்றிற் போகவர வலைந்தெஞ்ஞான்று
மளவிலா வழிதுயறா னொந்திளைத்த வளவிலா வுயிர்க்குந் தாயா
யளவிலா வருட்டம்பா லினிதருத்தி யளவிலா வூழி வாழ
வளவிலா வானந்த மருண்ஞானப் பூங்கோதைக் கன்பு செய்வாம்.

**சிதம்பரம் - சிவகாமியம்மை**

"மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி னொளி போற்றி யுலகும்பர்
சென்று தொழ வருள்சுரக்குஞ் சிவகாமசுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி"

16.07.2017 ஞாயிற்றுக்கிழமை முதல்
26.07.2017 புதன்கிழமை வரை



உ
சிவமயம்
அருள்மிகு உண்ணாமுலையம்மன் துணை









# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

## திருவண்ணாமலை

பசலி 1427

tnhrce.org

# ஆடிப்பூரம் பிரம்மோற்சவம்

## அழைப்பிதழ்

காரொழுகும் குழலாளைக் கருணை வழிந்து ஒழுகும் இருக்கடைக்கண்ணாளை
மூரல் இளநிலவொழுக புழுகொழுக அழகொழுகும் முகத்தினாளை
வாரொழுகும் தனத்தாளை வடிவு ஒழுகித்தெரியாத மருங்குலாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணை உண்ணாமுலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

அன்புடையீர் ! வணக்கம்.

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகின்ற எல்லாம்வல்ல அருள்மிகு உண்ணாமுலை உடனுறை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் ஆடிப்பூரம் பிரம்மோற்சவம் நிகழும் திருவள்ளுவராண்டு 2048 ஆடி மாதம் 1-ஆம் தேதி (17.7.2017) திங்கட்கிழமை, அஸ்வினி நட்சத்திரம், அஷ்டமி திதி, சித்தயோகம் கூடிய சுபதினத்தில் விடியற்காலை 06.01 மணிக்குமேல் 7.30 மணிக்குள் கடக லக்கினத்தில் த்வஜாரோகணம் செய்து தினசரி காலை மாலை இருவேளைகளிலும் அருள்மிகு பராசக்தி அம்மன் திருவீதியுலா நடைபெறும். 10-ஆம் நாள் (26.07.2017) புதன்கிழமை பராசக்தி அம்மனுக்கு வளைகாப்பு உற்சவமும், இரவு திருவீதியுலா மற்றும் அருள்மிகு உண்ணாமுலையம்மன் சன்னதி முன்புறம் தீமிதி விழாவும் நடைபெற இருப்பதால் மெய்யன்பர்கள் அனைவரும் வந்திருந்து திருவிழாவினை கண்டுகளித்து அம்மன் திருவருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

# திருவிழா / உபயதாரர்கள் விபரம்

| விழா நாள் | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆடி மாதம் | ஆங்கில தேதி | கிழமை | காலை / மாலை வீதியுலா உற்சவம் | திருக்கோயில் நிர்வாகம் மற்றும் உபயதாரர்கள் |
|---|---|---|---|---|---|
| | ஆனி 32 | 16.07.2017 | ஞாயிறு | விநாயகர் உற்சவம் | திரு. அ.அருள்குமரன் பி.ஏ.பி.எல்., 7, ஒத்தவாடை தெரு, திருவண்ணாமலை. |
| 1 | ஆடி 1 | 17.07.2017 | திங்கள் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு. அ.நடராஜன் & சன்ஸ் முன்னாள் செயலர், கூ.நகர்புற வங்கி, தி.மலை |
| 2 | 2 | 18.07.2017 | செவ்வாய் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு. கே.ஆர்.ஜனார்த்தனன் செட்டியார் ஜவுளி வியாபாரம், திருவண்ணாமலை. |
| 3 | 3 | 19.07.2017 | புதன் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு. சி.வேடியப்பன் முன்னாள் அறங்காவலர், திருவண்ணாமலை. |
| 4 | 4 | 20.07.2017 | வியாழன் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு. கோ.அனந்தகிருஷ்ணன் 3, வடஒத்தவாடைத் தெரு, திருவண்ணாமலை. |
| 5 | 5 | 21.07.2017 | வெள்ளி | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு.பி.சுப்பிரமணிய அய்யர், 3, பேய கோபுரத் தெரு, திருவண்ணாமலை. |
| 6 | 6 | 22.07.2017 | சனி | விநாயகர் பராசக்தி அம்மன் | அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் சிவாச்சாரியார்கள், திருவண்ணாமலை |
| 7 | 7 | 23.07.2017 | ஞாயிறு | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு. அ.அருணாசலம் அருணா ஒயர்சேல்ஸ் கார்ப்பரேஷன் திருவண்ணாமலை |
| 8 | 8 | 24.07.2017 | திங்கள் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி விஜயலஷ்மி அக்ரோ சர்வீஸ், திருவண்ணாமலை |
| 9 | 9 | 25.07.2017 | செவ்வாய் | விநாயகர் பராசக்தி அம்மன் | திரு.எம்.கே.பாலசுப்பிரமணியன் ஓம்சக்தி மாவு ஆலை, திருவண்ணாமலை |
| 10 | 10 | 26.07.2017 | புதன் | ஆடிப்பூரம் | திரு.ஆர்.முத்துக்குமாரசுவாமி முன்னாள் அறங்காவலர், பி.எஸ்ஸி., பி.எல்., திரு.ஆர்.கோவிந்தராஜி,பி.ஏ.,பி.எல்., வழக்கறிஞர், திருவண்ணாமலை. திரு.ஆர்.அருணகிரி, பி.எஸ்ஸி.,டி.சி.எச்., திருவண்ணாமலை |
| காலை பஞ்சமூர்த்திகள் அபிஷேகம். மாலை வளைகாப்பு மண்டபத்தில் அருள்மிகு பராசக்தி அம்மன் அபிஷேகம் மற்றும் வளைகாப்பு உற்சவம். இரவு அருள்மிகு பராசக்தி அம்மன் திருவீதி உலா. | | | | | |

tnhrce.org

ஆடிப்பூரத்தை முன்னிட்டு 26.07.2017 அன்று இரவு 12.00 மணிக்குமேல் உண்ணாமுலையம்மன் சன்னதி முன்புறம் தீமிதி விழாவும் அதனை தொடர்ந்து அருள்மிகு பராசக்தி அம்மன் திருவீதியுலாவும் நடைபெறும்.

## அன்னதான திட்டம்

இத்திருக்கோயிலில் நாள்தோறும் பகல் 12.00 மணியளவில் அன்னதானக் கூடத்தில் சேவார்த்திகளுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்த அன்னதான திட்டத்திற்கு நன்கொடை செலுத்த விரும்பும் அன்பர்கள் ரூ.7,500/- திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 300 நபர்களுக்கு அன்னதானம் செய்யலாம். மேற்படி திட்டத்திற்கு நன்கொடை வழங்குவோர் பயன்பெறும் வகையில் வருமான வரி சட்டம் 80G-ல் வரிவிலக்கு பெறப்பட்டுள்ளது.

tnhrce.org

தங்க ரதம் இழுத்தல், அன்னதானம் திட்டத்திற்கு நன்கொடை வழங்குதல் உள்ளிட்ட மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**இணை ஆணையர் / செயல் அலுவலர்,**
அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்,
திருவண்ணாமலை - 606 601.
தொலைபேசி எண் : 04175 - 252438
Website : www.arunachaleswarar.org.
E.mail : arunachaleswarar@tnhrce.org.

அனைவரும் வருக! சிவனருள் பெறுக!!

இங்ஙனம்,

திரு. **இரா. ஜெகன்னாதன்,** M.Com.,B.L.,
தக்கார் / இணை ஆணையர் / செயல் அலுவலர்

---

**பசலி 1427**

திருக்காளத்தி - ஞானப்பூங்கோதை

அளவிலாத் தோற்றம் றாயவற்றிற் போகவர வலைந்தெஞ்ஞான்று
மளவிலா வழிதுயறா னொந்திளைத்த வளவிலா வுயிர்க்குந் தாயா
யளவிலா வருட்டம்பா லினிதருத்தி யளவிலா வூழி வாழ
வளவிலா வானந்த மருண்ஞானப் பூங்கோதைக் கன்பு செய்வாம்.

சிதம்பரம் - சிவகாமியம்மை

"மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி னொளி போற்றி யுலகும்பர்
சென்று தொழ வருள்சுரக்குஞ் சிவகாமசுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி"